கள் உள்பட மொத்தத்திலே பதினெட்டு பேருந்துகள் சேதமடைந்தன. சேதமடைந்த மொத்த சொத்தின் மதிப்பு இருபதாயிரம் ரூபாய் இருக்குமென்று கூறப்படுகிறது. அங்கே இந்தத் தாக்குதலுக்குப் பெண்களும் விடு டவில்லை. அவர்களும் அந்தத் தாக்குதலுக்கு அங்கே ஆளாகி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு நிலைமை கட்டுக்கு அடங்காமல் போன சூழ்நிலையில் அங்கிருந்த போலீசார் பக்ஷாட் என்கிற அந்தத் துப்பாக்கி பிரயோகத்தை நடத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் போலீசார் சொல்கின்றார்கள்.

இப்பொழுது நிலைமை அங்கே கட்டுக்கு அடங்கியிருந்தாலும் கூட, அதிலே எனக்கு உள்ள வருத்தம், அங்கே ஒரு பத்தாயிரம் பேர் திரண்டு ஊர்வலம் வருகிறார்கள் என்கிறபொழுது அந்த இடத்திற்கு எஸ்.பி. நிச்சயமாக ஆரம்பத்திலேயே சென்றிருக்க வேண்டும். அதற்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரியாவது அங்கே சென்றிருக்க வேண்டும். அவர்கள் ஏன் சென்று, முன்கூட்டியே முன் ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்பதற்காக அவர்களிடத்திலே விளக்கம் கேட்குமாறு நான் அரசுத் துறையின் மூலமாகக் கூறியிருக்கிறேன்.

எனினும் இப்பொழுது அங்கு எந்தப் பதட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் பேச்சு வார்த்தை குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் ஒரு தெளிவான தகவலைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே இங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசிய நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூட அன்றைக்கு இந்த இலங்கை அரசிடம் விடுதலைப் போராளிகள் பேச்சு வார்த்தை பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆனால், இன்றைய தினம் அது வேறுவிதமாகத் திரும்பி, இன்றைக்குத் தமிழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்ற அளவிற்கு விடுதலைப் போராளிகள் டிமான்ட் வைப்பதாகவும், எனவே, நம்முடைய இந்திய அரசாங்கம், படைகளை வாபஸ் வாங்க மாட்டோம் என்று சொல்லுகின்ற அளவிற்கு ஒரு மோசமான சூழ்நிலை, ஒரு சுமுகமான சூழ்நிலை இல்லாத நிலை இன்றைக்கு இலங்கையிலே ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தெரிந்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமோ அல்லது விடுதலைப் புலிகளிடமோ பேசுவது போன்ற முயற்சிகளை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் விளக்க வேண்டுமென்று எண்ணியிருந்த ஒன்றை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இந்த வினாவின் மூலமாகத் துணை புரிந்து, அதை விளக்குகிற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

அங்கே இலங்கைப் போராளிகள், குறிப்பாக விடுதலைப் புலிகள் தமிழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று சொன்னதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். பத்திரிகைக்காரர்களோ, பொது மக்களோ அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழ் மாநில அரசு என்றால், இங்கே இருக்கின்ற தமிழ் மாநில அரசு அல்ல, அங்கே ஏற்கனவே உருவாகி, வரதராஜப் பெருமாள் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாநில அரசு-மாநில கவுன்சில் அதைக் கலைக்க வேண்டுமென்று சொன்னதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதல் காரியமாக, இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே இந்தியப் பிரதமர் அவர்கள், ஒரு சுமுகமான முடிவு காண, விடுதலைப் புலிகள் உள்ளிட்டு எல்லாத் தரப்பாரையும் அழைத்து பேச வேண்டும்; விடுதலைப் புலிகள் மாத்திரம் அல்ல; வரதராஜப் பெருமாள் மற்றும் உள்ள போராளி இயக்கங்கள் அனைத்தையும் அழைத்துப் பேச வேண்டும்; இலங்கை அரசினுடைய பிரதிநிதிகளோடும் பேச வேண்டும். அதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டுமென்று, நான்கு தடவை, இரண்டு முறை நான் டெல்லிக்குச் சென்றபோது, 4 தடவை இதற்காக இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் அவர்களைச் சந்தித்து முறையிட்டுக் கொண்டேன். அவர்களும் அதற்கான வழிகளையெல்லாம் என்னிடத்திலே எடுத்து சொல்லி இந்தப் பேச்சுவார்த்தை உடனடியாக நடைபெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டவாறு நான் அதற்கான தாக்கீது வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறபொழுது என்ன காரணத்தாலோ அது தடைப்பட்டு, அது என் அரசியல் காரணமோ அல்லது வேறு காரணமோ எனக்குத் தெரியாது—அது தடைப்பட்டு, எடுக்கப்பட்ட முயற்சிகள் திடீரென்று அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டன.

அதற்கிடையிலேதான் அங்கே இலங்கையினுடைய அதிபர் பிரேமதாசா விடுதலைப் புலிகளை அழைத்துப் பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு, அவர்களோடு இன்றைக்குப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையிலே அவர்கள் போடுகின்ற நிபந்தனையை இலங்கை அரசு ஏற்றுக் கொள்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அங்கே இப்பொழுது நிலைமை நம்முடைய கையை விட்டுப் போய் விட்டதைப்போன்ற ஒரு சூழல் இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

1989 மே 2] (டாக்டர் மு. கருணாநிதி)

இதற்கு மேல் எப்படி பிரச்சினைகள் வளர்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அதைக் கவனித்துப் பார்த்துத்தான் மேலும் என்ன நடவடிக்கை எடுக்கலாம், இந்திய அரசை எப்படி அணுகலாம் என்பதைப் பற்றியெல்லாம் நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

4. அறிவிப்புகள்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை, மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகப் பேரவைகளுக்கு முன் மொழியப் பெற்ற உறுப்பினர்களின் பெயர்கள் பின் வருமாறு :

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. எம். அப்துல் லத்தீப்.
திரு. எம். சேட்டு.
டாக்டர் கோ. நந்தகோபால கிருட்டிணன்.
டாக்டர் க. காஞ்சனா
திரு. அ. இரகுமான்கான்
திரு. எஸ். டி. உகம்சந்த்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. பெ. சீனிவாசன்
திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
திரு. ஆர். சிங்காரம்.
திரு. எஸ். ஆர். இராதா

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை :

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி
திரு. இ. புகழேந்தி.
திரு. குமரி அனந்தன்.